**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 103** **நாள்: 05.08.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இரவு நேர துப்புரவு பணிகள் தீவிரம் !**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் பகல் நேர துப்புரவு பணி மேற்கொள்ள இயலாத இடங்களான போக்குவரத்து நெரிசலான பேருந்து சாலைகள், முக்கிய உட்புற சாலைகள் மற்றும் அங்காடி பகுதிகளில் இரவுநேர துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரவுநேர துப்புரவு பணிக்கென தற்போது 1741 துப்புரவு பணியாளர்கள், 423 மூன்று சக்கர மிதிவண்டிகள், 10 இலகுரக காம்பேக்டர்கள், 80 கனரக காம்பேக்டர்கள் மற்றும் 12 இயந்திர பெருக்கிகள் ஈடுபடுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. இரவுநேர துப்புரவு பணியில் தினசரி சுமார் 1055 மெட்ரிக் டன் குப்பை அகற்றப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் மேலாடைகளும் வழங்கப்பட்டு இப்பணியினை இரவு நேரத்தில் கண்காணிக்க செயற்பொறியாளர் நிலையில் பணி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இரவுநேர துப்புரவு பணியினை விரிவுபடுத்த மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு செயல்படுத்த தேவையான கூடுதல் வாகனங்கள், பணியாளர்கள் ஒதுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் வருங்காலங்களில் சுமார் 1300 மெட்ரிக் டன் குப்பை அகற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**